
15

# பல்சுவைப் பாடல்கள்

பல்வேறு புலவர்கள் பல்வேறு வடிவங்களிலும் பல்வேறு சுவைகளிலும் எழுதிய பாடல்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

## மயில் ஒப்பாங் கரும்பு

19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் அழகிய சொக்கநாத பிள்ளை. அவர் பாடியுள்ள தனிப்பாடல்களுள் சிலேடைப் பாடல்கள் சிறப்பு மிக்கவை. இங்கு தரப்பட்டுள்ள பாடலில் மயிலுக்கும் கரும்புக்குமுள்ள ஒத்த தன்மை சிலேடையாகப் பாடப்பட்டுள்ளது. புலவரை ஆதரித்த முத்துசாமிப் பிள்ளை என்பவருக்கு நன்றியுடையவராக தன் பாடல்களில் அவர் பெயரையும் வைத்துப் பாடியுள்ளார்.



**மேனியெல்லாங் கண்ணுறலால் வேள்விரும்புந் தன்மையினால்**
**ஆனபசுந் தோகையினா லாடலினால் - மீனவனேர்**
**மானபரா நெல்லைநகர் வாழுமுத்துச் சாமிமன்னா**
**கானமயி லொப்பாங் கரும்பு**

### அரும்பதங்கள்

- வேள் - முருகன், மன்மதன்
- மீனவன் - மீன் கொடியை உடைய பாண்டியன்



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

**பொழிப்புரை :-**

பாண்டியனையொத்த மேலான பெருமையுடையவனே, திருநெல்வேலியில் வாழ்கின்ற முத்துசாமி மன்னா, உடல் முழுவதும் கண்போன்ற பகுதிகள் இருப்பதாலும் முருகவேள் வாகனமாக விரும்பிக் கொள்ளும் இயல்பினாலும், பச்சை நிறமுடைய தோகையினை உடையதாலும், நடனமாடுவதாலும், காட்டில் வாழும் மயிலுக்கு, எல்லாப் பாகத்திலும் கண்கள் இருப்பதாலும் மன்மதன் வில்லாக விரும்பும் தன்மையினாலும் அழகான பசிய இலைகளை உடைமையாலும் ஆலையில் ஆட்டப்படுவதாலும் கரும்பானது சமமாகும்.

## கிரகித்தற் பயிற்சி

2. இப்பாடலைப் பாடியவர் யார்?

3. சிலேடைக் கவி என்றால் என்ன?

4. ‘‘மீனவனேர் மானபரா!’’ என்ற தொடரின் விளக்கம் யாது?

5. இப்பாடலில் வந்துள்ள பதங்களின் சிலேடைப் பொருள்களை வைத்து பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| **சிலேடை பதம் (சொற்றொடர்)** | **மயில்** | **கரும்பு** |
|---|---|---|
| 1. மேனியெல்லாம் கண்ணுறலால். | | |
| 2. வேள் விரும்பும் தன்மையினால் | | |
| 3. பசுந்தோகையினால் | | |
| 4. ஆடலினால் | | |

## கூற்றினுங் கொடியவர்

குலோத்துங்க சோழன் - கம்பருக்கிடையில் நெருக்கமான உறவு காணப்பட்டது. இருப்பினும் ஒரு சமயம் குலோத்துங்க சோழமன்னன் கம்பன் மீது கோபம் கொண்டான். அச்சந்தர்ப்பத்தில் அம்மன்னனால் பாடப்பட்டதே இப்பாடல்.

**''போற்றினும் போற்றுவர்; பொருள் கொடாவிடில்**
**தூற்றினும் தூற்றுவர்; சொன்ன சொற்களை**
**மாற்றினு மாற்றுவர்; வன் கணாளர்கள்**
**கூற்றினும் பாவலர் கொடிய ராவரே!''**

### அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| ♦ | பாவலர் | - | புலவர் |
| ♦ | வன்கணாளர்கள் | - | கொடுமையுடையவர்கள் |
| ♦ | தூற்றுதல் | - | இகழ்தல் |
| ♦ | கூற்று | - | இயமன் |

### பொழிப்புரை

ஆசு, மதுரம், சித்திரம் விஸ்தாரம் ஆகிய பாடல்களைப் பாடும் வன்மையுள்ள புலவர்கள் ஒருவரைப் போற்ற வேண்டும் எனக் கருதினால் விஷேடித்துத் துதி செய்வார்கள். செல்வம் தராவிட்டால் பலரிடையே குறை கூற நினைத்து நிந்தனையாகவே பேசுவார்கள். சொன்ன சொற்களின் பொருளை மாறுபடுத்திச் சொல்லினும் மாற்றி உரைப்பர். ஆதலால் புலவர்கள் மிகவும் கொடுமையானவர்கள். அவர்கள் இயமனை விடவும் கொடியவர்கள் ஆவர்.

### கிரகித்தற் பயிற்சி

1. இத்தனிப்பாடல் யாரால் பாடப்பட்டது? இப்பாடலைப் பாடிய புலவரின் நோக்கம் யாது?
2. வசைக்கவி என்றால் என்ன?
3. ''சொன்ன சொற்களை மாற்றினும் மாற்றுவர்'' என்ற அடியை விளக்குக.
4. பாவலர் இயமனை விடக் கொடியவர் என்பதற்கு கவிஞர் காட்டும் ஆதாரங்கள் யாவை?

## மாதம்போங்காதவழி

சிலேடை, வசை, அங்கதப்பாடல்கள் பாடுவதிற் பெயர் பெற்றவர் காளமேகப்புலவர். விகடராமன் என்கின்ற ஒருவன் குதிரையிற் சவாரி செய்யும் விதத்தைக் கண்ட புலவரிடமிருந்து பாட்டொன்று பிறந்தது. அதுவே இப்பாடல்

**முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்**
**பின்னே இருந்திரண்டு பேர்தள்ள - எந்நேரம்**
**வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை**
**மாதம்போங் காத வழி**

### அரும்பதங்கள்

- காதம் - பத்துமைல் தூர அளவு
- கடிவாளம் - குதிரையின் வாயில் கட்டப் பயன்படுவது

### பொழிப்புரை

எப்பொழுதும் வேதம் பயில்கின்ற வாயினையுடைய விகடராமனது குதிரை, மூன்றுபேர் முன்புறமாக நின்று கடிவாளத்தைத் தொட்டிழுக்க, இரண்டுபேர் அதன் பின்புறத்தில் நின்று தள்ள மாதமொன்றுக்கு ஒரு காத தூரம் செல்லும்.

### கிரகித்தற் பயிற்சி

1. இப்பாடலைப் பாடியவர் யார்?
2. இப்பாடலில் இழையோடும் உணர்வு யாது?
3. விகடராமனுடைய குதிரையின் வேகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.
4. ‘‘எந்நேரம் வேதம் போம் வாயான் விகடராமன்’’ என்ற தொடரின் பொருளை எழுதுக.

## கொடியகானகத்தரை

கலிங்கத்துப்பரணி என்ற இலக்கியம் சயங்கொண்டாரால் பாடப்பட்டது. இது கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடுபாடியது, கோயில் பாடியது, பேய்கள் பாடியது, களம் பாடியது எனப் பல படலங்களை உள்ளடக்கியது. காளிதேவி வாழுமிடம் பாலை. அந்நிலத்தையும் அது வெம்மை மிகுதியால் விளங்கும் இயல்பையும் சிறப்பித்துப் பாடியுள்ள ‘காடு பாடியது’ என்ற பகுதியில் இருந்து இருபாடல்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

### பரிதியின் செயல்

தீயஅக் கொடிய கானகத் தரை
திறந்த வாய்தொறும் நுழைந்து, தன்
சாயை புக்க வழியாது எனப் பரிதி
தன் கரம் கொடு திளைக்குமே!

### நெருப்பும் புகையும்

செந்நெருப்பினை தகடு செய்து பார்
செய்த தொக்கும் அச்செந்தரைப் பரப்பு
அந்நெருப்பினில் புகை திரண்ட தொப்பு
அலது ஒப்புறா, அதனிடைப் புறா

### அரும்பதங்கள்

- ♦ பரிதி - சூரியன்
- ♦ திளைத்தல் - நிலைத்தல்

**பொழிப்புரை**

பாலைநிலம் மிகக் கொடியது. அதன் தரை முழுவதும் வெயிலின் வெப்பத்தால் ஏற்பட்ட நிலவெடிப்புகள் நிறைந்துள்ளன. அவற்றில் சூரியனானவன் தனது மனைவியாகிய சாயை என்பவள் புகுந்து ஒளித்துக் கொண்ட இடம் யாது? எனத் தன் ஒளிக்கதிர்களாகிய கைகளால் தடவி இடை விடாது திளைத்துத் தேடுமே!

செக்கச் சிவந்த பாலைநிலப்பரப்பானது, செந்நெருப்பைக் கொட்டித் தகட்டைப் பழுக்கச் செய்து நிலத்தை அமைத்ததை ஒத்திருக்கிறது. அப்பாலை நிலத்தின் மேலே பறக்கும் புறாக்கள், அந்நெருப்பிலிருந்து திரண்டெழுந்த புகைக்கூட்டத்தை ஒத்திருக்குமே அல்லாமல் வேறு எவற்றிற்கும் ஒப்பாகமாட்டா.

### கிரகித்தற் பயிற்சி

1. மேல்வரும் இரண்டு பாடல்களும் அமைந்துள்ள நூல் யாது?
2. இந்நூல் யாரால் பாடப்பட்டது?
3. பாலை நிலத்தின் வெம்மையைக் கூறக் கையாளப்பட்டுள்ள உத்திகள் யாவை?
4. பரிதியின் செயலை விளக்கும் பாடலில் நிலத்தின் தோற்றத்தை விளக்கும் விதத்திலான பாடலடியை எழுதுக.
5. **‘‘பரிதி தன் கரம் கொடு திளைக்குமே’’** என்ற தொடர் மூலம் புலவர் விளக்க முற்படும் கருத்து யாது?
6. பாலை நிலத்தின் இயல்பினை எழுதுக.

## வாரிமணக்கும் நதியையே

சிறுவர் பாடல்கள் பாடி, தங்கத் தாத்தா என்று போற்றப்பட்டவர் ஈழத்துப் புலவராகிய நவாலியூர் சோமசுந்தரப் புலவர். சிறுவர் செந்தமிழ் என்ற நூலில் ''இலங்கை வளம்'' எனும் தலைப்பில் அவர் பாடிய பாடலின் ஒருபகுதி இங்கு தரப்பட்டுள்ளது.

**மங்க லந்திகழ் மாப்பிள்ளை மார்வர**
**மாமன் பக்கம் வரவெதிர் கொள்ளல்போற்**
**பொங்கு வெள்ளப்புதுமண நீர்வரப்**
**புரளு மீனிரை போயெதிர் கொள்ளுமே**

**அடுக்கு ஞெண்டு குடைகள் பிடிக்க**
**ஆல வட்டந் திருக்கை - யெடுக்க**
**நடுக்குஞ் சுறவு நாந்தக மேந்த**
**கல்ல கணவாய் கவரி யிரட்ட**

**முன்னே யாமை பரியஞ் சுமக்க**
**முரல்கள் சின்னமூதி நிற்க**
**மன்னு திரைகள் முழவ மியம்ப**
**வாரி மணக்கும் நதியையே**

### அரும்பதங்கள்

- ஞெண்டு - நண்டு
- சுறவு - சுறாமீன்
- நாந்தகம் - மங்கலப் பொருள் / வாள்
- பரியம் - பெண்ணுக்கு மணமகனால் வழங்கப்படும் மங்கலப் பொருள்
- முழவம் - முரசு

### பொழிப்புரை

மங்கலச் சின்னங்களுடன் மாப்பிள்ளைமார்கள் வர மாமன் பக்கமாக இருந்து வரவேற்பது போல் பொங்கிக் கொண்டு வந்த புது வாசனை நிறைந்த வெள்ளநீரின் வரவை, புரண்டு கொண்டுவந்த மீன்கூட்டம் சென்று வரவேற்குமே.

வரிசைவரிசையாக நண்டுகள் குடைகளைப் பிடிக்க திருக்கைமீன் ஆலவட்டம் ஏந்த நடுக்கத்தைத் தருகின்ற கொம்புள்ள சுறாமீன் வாளினை ஏந்த கடலுள் மறைந்து வாழ்கின்ற கணவாய்கள் சாமரை வீச, ஆமையானது எல்லாவற்றிற்கும் முன் நின்று பரியங்கள் ஏந்த, முரல் மீன்கள் மங்கலச் சின்னங்களை ஊதி நிற்க, அடுக்கடுக்கான அலைகள் மேளங்கள் முழங்க, கடலானது நதியைத் திருமணம் செய்து கொள்கின்றது.

## கிரகித்தற் பயிற்சி

1. இப்பாடற் பகுதியைப் பாடியவர் யார்?
2. இப்பாடற் பகுதி இடம் பெற்ற இலக்கிய நூல் எது?
3. இப்பாடல் மூலம் புலவர் உணர்த்தும் முக்கிய இயற்கை நிகழ்வு யாது?
4. இப்பாடல்களைப் படித்த பின்னர் உங்கள் மனதில் தோன்றும் காட்சியை வருணித்து ஒரு பந்தி எழுதுக.
5. கடல்வாழ் உயிரினங்களைத் திருமணவைபவத்தோடு கவிஞர் சம்பந்தப்படுத்தும் விதத்தினை விளக்குக.
6. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமானங்களையும் உவமேயங்களையும் எடுத்துக் கூறுக.

பொருத்தமான சொற்களை வைத்துப் பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| மங்கலப் பொருள் | கடல்வாழ் உயிரினம் | பொருத்தப்பாடு |
|---|---|---|
| (உதாரணம்)குடை | நண்டு | வளைந்த ஓடு |
| ஆலவட்டம் | ...................... | அகன்று பரந்து விரிந்திருத்தல் |
| வாள் | ....................... | நீண்ட கூரிய கொம்பு |
| ....................... | ஆமை | ......................................... |
| ................... | கணவாய் | ............................................ |
| மங்கலச்சின்னம் (வாத்தியம்) | ....................... | ஊசி போன்ற நீண்ட அமைப்பு |
| முழவு | திரை | .......................................... |



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## ஏழைக்கு எழுத்தறிவித்தல்

மகாகவி சுப்பிரமணியபாரதி பாடிய பாடல் இது. கல்வித் தெய்வமாகக் கருதி வழிபடப்படும் சரஸ்வதி தேவியின் புகழ் பற்றிப் பாடிய பாடலிலிருந்து ஒரு பாடல் இங்கு தரப்பட்டுள்ளது.

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண்சு னைகளி யற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ளத ருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கிஒ ளிரநி றுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்

### பொழிப்புரை

இனிமையும் வாசனையும் நிறைந்த பழங்களைத் தரும் சோலைகளை அமைத்தல், இன்பமான தண்ணீர் நிறைந்த குளிர்ச்சியான குளங்களை அமைத்தல், உணவு விடுதிகள் ஆயிரம் அமைத்தல், ஆலயங்கள் பதினாயிரம் அமைத்தல் முதலான பல தருமங்கள் செய்து பெயரையும், புகழையும் நாடு முழுவதிலும் பரப்பி விடுதல் ஆகிய இவையாவிலும் பார்க்கக் கோடிக்கணக்கில் நன்மையைத் தரக் கூடிய மேலான தர்மம், ஏழை ஒருவனுக்குக் கல்வியினைக் கற்பித்தலேயாகும்.

### கிரகித்தற் பயிற்சி

1. இக்கவிதையைப் பாடியவர் யார்?
2. இக்கவிதையின் மூலம் கவிஞர் உணர்த்த விரும்பும் பிரதான அறக்கருத்தினைக் குறிப்பிடுக.
3. இக்கவிதையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அறச்செயல்கள் யாவை?
4. ‘‘ஏழைக்கு எழுத்தறிவித்தல்’’ என்ற தொடர் மூலம் ஆசிரியர் வலியுறுத்தும் கருத்து யாது?

## மன்னர்பெண்கொளல் ஒக்குமோ

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடியுள்ள திருவெங்கைக் கலம்பகம் இலக்கியச் சுவை மிக்கது. பல்வேறு சுவைகளை உள்ளடக்கிய இந்நூலில் இருந்து ஒருபாடல் இங்கு தரப்பட்டுள்ளது. பாண்டிய நாட்டையடுத்துக் காணப்பட்ட சிற்றூர் ஒன்றின் வேட்டுவத் தலைவனின் அழகிய மகளை மணமுடிக்க விரும்பிய அரசனொருவன் தன் தூதனிடம் ஓலை கொடுத்தனுப்புகிறான். ஓலை கண்ட வேட்டுவத்தலைவன் மன்னர் மீது கோபமுற்றுப் பாடுவதாக அமைந்த பாடலிது.

**விற்றதார் கலைபாதியோடு வனத்திலே அழவிட்டதார்**
**வெஞ்சிறைப்புக விட்டதார் துயிலுரியவிட்டு விழித்ததார்**
**உற்ற தாரமும் வேண்டுமென்றினி மன்னர் பெண்கொள லொக்குமோ**
**உமியடா மணமென்ற வாய்கிழித் தோலை காற்றி லுருட்டடா**
**வெற்றியாகிய முத்திதந்திடும் வெங்கை மாநகர் வேடர்யாம்**
**விமலரானவ ரெமையடுத்தினி தெங்க ளெச்சில் மிசைந்ததால்**
**பெற்றவேலன் தனக்குநாமொரு பெண்வளர்ப்பினி லீந்தனம்**
**பெற்ற பெண்ணைக் கொடுப்பமோ இஃதென் பேய்பிடித்திடுந்தூதரே**

### அரும்பதங்கள்

- கலை - ஆடை
- ஓலை - திருமுகம், கடிதம்
- முத்தி - திருமகள்

### பொழிப்புரை

மனைவியை விற்றது யார்? பாதி ஆடையுடன் காட்டிலே கண்ணீர் விட விட்டது யார்? கொடிய சிறைவாசம் செய்ய விட்டது யார்? சபை நடுவில் ஆடை களைவதைப் பார்த்திருந்தவர் யார்? இதனால் அரசர்கள் தமக்கொரு மனைவி வேண்டுமென்று பெண் கேட்பது தகுதியானதோ? திருமணம் என்று நீ உன் வாயினால் கூறிய வார்த்தையை உமிழ்ந்து விடடா, நீ கொணர்ந்த ஓலையைக் கிழித்து, காற்றில் பறக்கவிடடா. வெற்றியாகிய திருமகள் உறைகின்ற வெங்கை மாநகரில் வாழ்கின்ற வேடர் நாம் குற்றங்களற்ற இறைவன் (சிவன்) எம்மிடம் வந்து நாம் உண்ட உணவின் மிகுதியை விரும்பி உண்டதால் அவர் பெற்ற மகனான வேலனுக்கு நாம் வளர்த்த பெண்ணைக் கொடுத்தோம். நாம் பெற்ற பெண்ணை உம் மன்னனுக்குக் கொடுப்போமோ? இது என்ன பேச்சு, உமக்குப் பேய் பிடித்ததாலா இவ்வாறு பேசுகிறீர்?

## கிரகித்தற் பயிற்சி

1. இப்பாடலைப் பாடியவர் யார்?

2. இப்பாடலில் இழையோடும் உணர்வு யாது?

3. இப்பாடலில் இடம்பெறும் மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அம்மன்னர்களின் வரலாறு கூறும் இலக்கியங்களை இணைத்துக் காட்டுக.

4. பின்வரும் அட்டவணையில் 'அ' இற்கு பொருத்தமானதை 'ஆ' விலிருந்து தெரிந்து பொருத்துக.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. அரிச்சந்திரன் | மனைவியின் ஆடையை சபையிலே களைவதற்கு இடமளித்தவர். |
| 2. இராமன் | பாதி ஆடையுடன் காட்டில் மனைவியை விட்டுச் சென்றவர். |
| 3. நளன் | தனது மனைவியை காசுக்காக விற்றவர். |
| 4. பாண்டவர்கள் | அசோக வனத்தில் மனைவியைச் சிறைவாசம் செய்ய விட்டவர். |

5. " ஓலை காற்றில் உருட்டடா" என்று கூறுவதற்கான காரணங்களாகக் குறிப்பிடப்பட்டவை யாவை?

6. வேடர், தூதுவருக்கு தம் பரம்பரைப் பெருமையை எவ்வாறு புகழ்கிறார்?

7. இப்பாடலில் அரசர்களுடன் தொடர்புபட்டதாக கூறப்படும் சம்பவங்கள் ஒவ்வொன்றையும் மிகச் சுருக்கமாக எழுதுக.

## இலக்கணம்

**ஆகுபெயர்**

- ♦ உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கை உலகக் கோப்பையைக் கைப்பற்றியது.
- ♦ இந்த வாக்கியத்தில் உலகக் கோப்பையை கைப்பற்றியது எது? இலங்கை
- ♦ உண்மையில் இலங்கை ஒரு நாடாகும். ஆனால் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது இலங்கை அல்ல. இலங்கை நாட்டுக்குரிய உதைபந்தாட்ட அணியே.
- ♦ மேற்படி வாக்கியத்தில் இலங்கை என்பது அந்த நாட்டின் உதைபந்தாட்ட அணியைக் குறித்தே வந்துள்ளது.
- ♦ இவ்வாறு ஒரு பெயர்ச்சொல் தனது கருத்தை வெளிப்படுத்தாமல் தன்னோடு தொடர்புடைய வேறொன்றைக் குறித்து அல்லது வேறொன்றிற்கு ஆகிவருதல் ஆகுபெயர் எனப்படும்.

**ஆகுபெயரின் வகைகள்**

- ∗ பொருளாகு பெயர்
- ∗ சினையாகு பெயர்
- ∗ காலவாகு பெயர்
- ∗ இடவாகு பெயர்
- ∗ குணவாகு பெயர்
- ∗ தொழிலாகு பெயர்

- ★ கமலா **மல்லிகை** சூடினாள்.
- ★ தேயிலைத் தோட்டத்தில் **தேயிலை** நட்டனர்.
- ★ **கோடை** கொளுத்துகிறது. வெப்பத்தைத் தாங்க முடியவில்லை.
- ★ சிறந்த பெறுபேற்றைப்பெற்ற செந்தூரனை **ஊர்** பாரட்டியது.
- ★ பிறந்த நாளைக் கொண்டாடிய சுமதி அனைவருக்கும் **இனிப்பு** வழங்கினாள்.
- ★ பாணுடன் **பொரியல்** உண்டேன்.

**மேலே தரப்பட்டுள்ள வாக்கியங்களில்**

- ♦ மல்லிகை
- ♦ தேயிலை
- ♦ கோடை
- ♦ ஊர்
- ♦ இனிப்பு
- ♦ பொரியல்என்பன ஆகுபெயர்கள் ஆகும்.

- மல்லிகை என்பது கொடியின் (பொருளின்) பெயர். மேற்படி வாக்கியத்தில் அதன் பூவிற்கு (சினைக்கு) ஆகிவருகிறது. இவ்வாறு பொருளின் பெயர் அதனது சினைக்கு ஆகி வருமாயின் அது **பொருளாகு பெயர்** ஆகும்.
- தேயிலை என்னும் சினைப்பெயர் அதன் முதலாகிய செடிக்கு ஆகிவருகிறது. இவ்வாறான ஆகுபெயர் **சினையாகு பெயர்** ஆகும்.
- கோடை என்னும் காலத்தின் பெயர் அக்காலத்தில் எறிக்கும் வெயிலுக்கு ஆகிவருவதால் அது **காலவாகு பெயர்** ஆகும்.
- ஊரில் வசிக்கும் மக்களுக்காக ஊர் என்னும் இடப்பெயர் ஆகி வருகிறது. அவ்வாறானது இடவாகுபெயர் ஆகும்.
- இனிப்பு என்பது சுவை ஆகிய குணத்தைக் குறிக்கும் பெயர். அக்குணத்தையுடைய பொருளுக்கு ஆகிவருகிறது. அவ்வாறானது குணவாகு பெயர் ஆகும்.
- பொரியல் என்னும் தொழிலின் பெயர் அத்தொழிலால் கிடைத்த உணவிற்கு ஆகிவருவதால் அது தொழிலாகு பெயர் ஆகும்.

## பயிற்சி

**(அ) பின்வரும் வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்களை இனங்கண்டு அவற்றின் வகைகளை எழுதுக.**

1. சிறுமி முல்லை சூடி மகிழ்ந்தாள்.
2. தோட்டத்தில் நாலுமணி பூத்துக் கிடக்கிறது.
3. சிங்கள மக்கள் எமது பொங்கலை ரசித்து உண்டனர்.
4. எனது அப்பா, புல் மேய்ந்து விட்டு வந்த சிவலைக்கு தண்ணீர் கொடுத்தார்.
5. அன்னை தெரேஸாவை உலகமே போற்றுகிறது.
6. கோயில் வாசலில் கார்த்திகை பூத்துக் குலுங்கியது.
7. விவசாயி தோட்டத்தை பண்படுத்தி வெற்றிலை நாட்டினான்

**(ஆ) பின்வரும் பந்தியை வாசித்து அதில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்களை இனங்கண்டு எழுதுங்கள்.**

சிலநாட்கள் கழித்து பாடசாலைக்கு வந்த ரதி ‘‘ என்ன ரீச்சர் உங்கள் ஊரில் ஒரே வெள்ளமாமே. ஊரே இடம்பெயர்ந்து விட்டதாமே” எனக் கேட்டாள். அதற்கு ஆசிரியை ‘‘ஆமாம் என்ன செய்வது தலைதப்பினால் போதுமென்று இடம்பெயர்ந்து போய் தெரிந்த வீடுகளிலும், பள்ளிக்கூடங்களிலும் இருக்கிறோம். பொங்கலும் சம்பலுந்தான் உயிரைப் பிடித்து வைத்திருக்கின்றன. மாரி பொழிந்து எல்லாவற்றையும் அழித்து விட்டது” என்றார்.

## மொழி வளம்

### அணிகள்

### 01 உவமை அணி

ஒரு பொருள், குணத்தால் அல்லது தொழிலால் அல்லது பயனால் மற்றொரு பொருளை ஒத்திருக்கும் வகையில் வர்ணிப்பது உவமை அணியாகும்.

உவமை அணியில் உவமானம், உவமேயம், உவமை உருபு, பொதுத்தன்மை என்பன அடங்கியிருக்கும். ஒப்புமை கூற அடிப்படையாக அமைந்த உலகறிந்த பொருள், உவமானம் எனப்படும். அதனோடு உவமிக்கப்படும் பொருள் உவமேயம் எனப்படும். இரண்டுக்கும் பொதுவாக வரும் குணம் அல்லது தொழில் அல்லது பயன் பொதுத்தன்மை எனப்படும். போல, போன்ற என்பன உவமை உருபுகளாகும்.

1. **கீர்த்தனி தேன் போன்ற குரலால்** இனிமையாகப் பாடினாள்.
2. **மதியை ஒத்த அவளது முகத்தில்** சோகம் குடி கொண்டிருந்தது.
3. **சீவிய பென்சில் குச்சி போல** அவனிருந்தான்.
4. **புல்லு நுனிப் பூப்போல** மொட்டவிழ்க்கும் புதுப்பாட்டு.
5. **வில்லெறியும் அம்பைப்போல்** இலக்கைத் தாக்கும் விசையான சொல்லாற்றல்
6. **ஆழி கவிழ்ந்தது போல** விழுந்திடும் நீர்வீழ்ச்சி.
7. **காசுகளைக் குலுக்கிப்போட்டது போலக்** கலகலவெனச் சிரித்தான்.

மேலேயுள்ள தடித்த எழுத்திலுள்ள உதாரணங்களில் தேன், மதி, சீவிய பென்சில் குச்சி, புல்லுநுனிப்பூ, வில்லெறியும் அம்பு, ஆழிகவிழ்ந்தது, காசுகளைக் குலுக்கிப் போட்டது என்பன உவமானங்களாகும்.

மேற்படி உதாரணங்களில் வருகின்ற ''போல'' என்பது உவமை உருபு ஆகும்.

குரல், முகம், அவன், புதுப்பாட்டு, சொல்லாற்றல், நீர்வீழ்ச்சி, சிரிப்பு என்பன உவமேயங்கள் ஆகும்.

மேற்படி உதாரணங்களில் உவமானத்துக்கும் உவமேயத்துக்கும் இடையிலான பொதுத் தன்மையை நோக்குவோமாயின்

- தேன் குரல் - தேன் போன்ற குரல்
- தேன் - இனிமையானது
- குரல் - இனிமையானது

எனவே இரண்டுக்கும் பொதுவான தன்மை இனிமையாகும்.

**மதிமுகம் - மதிபோன்ற முகம்**

மதியின் தோற்றம் - குளிர்மை, பிரகாசம், அழகு
முகத்தின் தோற்றம் - அழகு, பிரகாசம்
எனவே பொதுத்தன்மை அழகு, பிரகாசம் என்பனவாகும்.
(இவ்வாறு ஏனைய உதாரணங்களின் பொதுத்தன்மையையும் ஒப்பிட்டு அறிக)

## 02. உயர்வு நவிற்சி அணி

கற்போரும் கேட்போரும் வியந்து மகிழும்படி, பெரியதை மிகப் பெரியதாக கூறும் பாங்கில் அமைவது உயர்வு நவிற்சி அணியாகும்.

**உதாரணம்**

கம்பராமாயணத்தில் அயோத்தி நகரின் சிறப்பை வர்ணிக்கும் கம்பர் பின்வருமாறு உயர்வு நவிற்சி அணியைக் கையாண்டுள்ளார்.

(அ) ''புயல்தொடு நெடுநிலை மாடத்
தின்னகர் புகலுமா றெவனோ''

வானத்தைத் தொடும் அளவிலான மாடங்கள் கொண்ட நகரம் எனக் கூறுவதன் மூலம் அங்கிருந்த மாளிகைகளின் சிறப்பு உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டுள்ளது.

## 03. உருவக அணி

உவமானம், உவமேயம் இரண்டிற்கும் வேறுபாடு இல்லாமல் தோன்ற, உவமேயத்தில் உவமானத்தை ஏற்றிக் கூறல் உருவகம் எனப்படும்.

அதாவது உவமைக்கு ஆதாரமாகும் ஒற்றுமை உணர்வின் முதிர்ச்சியே உருவகம் எனலாம்.

உருவகத்தில் வர்ணிக்கப்படும் பொருள் அல்லது கருத்து உவமேயம் ஆகும்.

**உதாரணம் :-**

(i) ''நீல வானப் பொய்கையிலே, நீந்தி நீந்திச் செல்லுவதே'
இங்கு நீல வானப்பொய்கை என்பது உருவகம். நீல வானமாகிய பொய்கை என்று விரியும்.

(ii) ''நாற்குணமும் நாற்படையா வைம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே யணி முரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு''

இச் செய்யுள் முழுமையும் உருவகங்கள் இடம் பெற்றுள்ளன. நாற்குணங்களாகிய படைகள், ஐம்புலனாகிய அமைச்சு, சிலம்பாகிய முரசு, கண்களாகிய வேல், வாள், வதனமாகிய மதிக்குடை, பெண்மையாகிய அரசு என உருவகங்கள் உள்ளன.

### 04 தற்குறிப்பேற்றம்

புலவன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவதனால் அமையும் அணி தற்குறிப்பேற்றம்.

இயற்கையாக, இயல்பாக நிகழ்கின்ற நிகழ்ச்சிகளிடையே புலவன் தன் கருத்தின் குறிப்பை ஏற்றி, அழகுற மொழிவது தற்குறிப்பேற்றம்.

**உதாரணம்** :- ‘‘புதிய வானம் புதிய பூமி - எங்கும்
பனிமழை பொழிகிறது.
நான் வருகையிலே என்னை வரவேற்று - வண்ணப்
பூமழை பொழிகிறது.’’

## பயிற்சி

(I) 1. உவமை அணி என்றால் என்ன? உதாரணம் ஒன்று தந்து விளக்குக.

2. பல்சுவைப் பாடல்களில் ‘‘காடுபாடியது’’ என்ற பாடப்பிரிவில் ‘‘நெருப்பும் புகையும்’’ என்ற பாடலை ஆதாரமாகக் கொண்டு உவமைகளை இனங்கண்டு பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| உவமையணி | உவமானம் | உவமைஉருபு | உவமேயம் | பொதுத்தன்மை |
|---|---|---|---|---|
| செந்நெருப்பினை தகடு செய்துபார் செய்தது ஒக்கும் அச்செந்தரைப் பரப்பு | | | | |
| அந்நெருப்பினில் புகை திரண்டது ஒப்பு அதன் இடைப் புறா | | | | |

(II) 1. உருவக அணி என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக.
2. உவமை அணிக்கும் உருவக அணிக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக.

(III) 1. உயர்வு நவிற்சி அணி என்றால் என்ன?
2. பல்சுவைப்பாடல்களில் உயர்வு நவிற்சி அணி வந்த பாடலொன்றை உதாரணமாக எடுத்துக்காட்டி இவ்வணியை விளக்குக.
3. உயர்வு நவிற்சி அணிக்கு நீங்கள் அறிந்த வேறு உதாரணங்கள் இரண்டு தருக.

(IV) 1. தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன?
2. இவ்வணிக்கு நீங்கள் அறிந்த உதாரணங்கள் இரண்டு தருக.
3. பல்சுவைப்பாடல்களில் காடுபாடியதில் ‘‘பரிதியின் செயல்’’ என்ற பாடலில் வந்துள்ள தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

(V) தமிழ் சினிமாப் பாடல்களில் இடம் பெற்றுள்ள உவமை, உருவக, தற்குறிப் பேற்ற, உயர்வு நவிற்சி அணிகளை இனங்கண்டு அட்டவணைப்படுத்துக.

## ஆக்கத்திறன்

**பாவனை செய்து பேசுதல்**

பாவனை செய்து பேசுதல் என்றால் நாம் ஒருவரை மனதில் நினைத்து அவரின் செயல்கள், பேச்சு என்பவற்றை வெளிப்படுத்தும் வகையில் பேசுதலாகும்.

**பாவனை செய்து பேசும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

1. பாவனை செய்து பேசப் போகும் நபர் பற்றி அறிந்து கொள்ளல்
    - ♦ அவர் பற்றிய வரலாறு
    - ♦ அவருடைய சமய, மொழி, சமூகப் பணிகள்
    - ♦ அவர் பேசும் விதம்
    - ♦ அவரின் தோற்றம் குணாதிசயங்கள்
2. தேர்ந்தெடுத்த தனிநபர் பற்றிப் பாவனை செய்து பேசும் பேச்சினை பலதடவைகள் பேசிப் பழகுதல்.
3. பாவனை செய்து பேசும் போது நோக்கம் பொருத்தப்பாட்டுடன் அமைதல்.
4. தேர்ந்தெடுத்த தனிநபரின் விடயங்களும் பாவனை செய்து பேசும் விடயங்களும் முரண்படாதிருத்தல்.
5. பாவனை செய்து பேசும் போது கூறியது கூறலைத் தவிர்த்தல்.

### பயிற்சி

**பின்வருவனவற்றுள் யாதாயினும் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து பாவனை செய்து பேசுக.**

1. பல்சுவைப் பாடல்களில் வந்துள்ள பாரதியாரின் கவிதையின் பொருளை நோக்காகக் கொண்டு பாரதியார் போல் பாவனை செய்து பேசுங்கள்.
2. பல்சுவைப்பாடல்களில் வந்துள்ள வேடன் கூற்றாகவரும் பாடலின் பொருளை ஆதாரமாகக் கொண்டு வேடன் போல் பாவனை செய்து பேசுங்கள்.
3. பல்சுவைப்பாடல்களில் வந்துள்ள குலோத்துங்க சோழனால் பாடப்பட்ட பாடலை மையமாகக் கொண்டு சோழமன்னன் போல் பாவனை செய்து பேசுங்கள்.